Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 175 / 2019

**DEPOSITION OF ACCUSED SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | பிரேம்குமார் | Calling: | விவசாயம் |
| Father's Name: | மனோகரன் | Religion: | |
| Village: | சம்மந்திக்குப்பம் | Age: | 38 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.03.2026

எதிரி ஆஜர். புகார்தாரர் ஆஜர்.

எ.த.சா.1 புகார்தாரர்தரப்பு குறுக்கு விசாரணை.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். நான் என் அம்மாவின் கர்ப்பப்பை சிகிச்சைக்காக பணம் வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் எவ்வளவு வாங்கினேன் என்பதை குறித்து எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கு ஆதரவாக வழக்கு காசோலையை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு காசோலையை கொடுக்கும்போது கையொப்பம் செய்து நிரப்பு கொடுத்தேனா என்றால் இல்லை, கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். வங்கியில் ஒரு காசோலை புக் பெறும்சமயத்தில் எத்தனை காசோலைகள் பெறமுடியும் என்றால் அந்த சமயத்தில் காசோலை புக்கில் 100 காசோலைகள் இருந்தது. 7 காசோலைகள் புகார்தாரரிடம் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் அந்த காசோலைகளின் எண்களை என்னால் கூற முடியுமா என்றால் முடியாது. நான் வாங்கிய பணத்தை திரும்ப கொடுத்துவிட்டேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை, என் சித்தப்பாவை சாட்சியாக சேர்த்தேன். என் முதன்மை விசாரணையில் என் சித்தப்பாவிடம் பணத்தை கொடுத்தேன் என கூறியுள்ளேனா என்றால்

அவர் முன்னிலையில் கொடுத்ததாக கூறியுள்ளேன். அவர் முன்னிலையில் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எங்கள் ஊர் குலதெய்வ கோவிலிடம் கொடுத்தேன்.

இன்றைய தேதி வரையில் நான் கொடுத்த காசோலையை புகார்தாரர் திரும்ப தரவில்லை என்பதற்காக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இவ்வழக்கின் அழைப்பாணை வந்த பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அவர்கள் புகாரை எடுக்கவில்லை. எந்த தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் பிப்ரவரி மாதம் 2019ம் வருடம் கொடுத்தேன். அதற்கான நகல் ஏதாவது வைத்துள்ளேனா என்றால் இல்லை, அவர்கள் புகாரை திரும்ப கொடுத்துவிட்டார்கள். எனக்கு அறிவிப்பு வந்தபிறகு இன்றைய தேதி வரை நான் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான், ஆனால் அறிவிப்பு என் சித்தப்பா வீட்டிற்கு சென்றது. வழக்கு தாக்கல் செய்த பிறகு ஏதாவது பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. வாணியம்பாடி கிராமிய காவல்நிலையத்திலிருந்து என்னை பிடியாணை மூலம் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் 29.08.2021ம் தேதி நாங்கள் பேசி முடித்துக்கொள்கிறோம் என எழுதி கொடுத்துவிட்டு வந்தது தான் தற்போது என்னிடம் காட்டப்படும் தாளில் உள்ளது என்றால் சரியல்ல, அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. புகார்தாரரிடம் நான் வழக்கு தாக்கல் செய்தபிறகு தொகை கொடுத்துவிடுகிறேன் என வாட்ஸ் ஆப்பில் குறுஞ்செய்தி அனுப்பினேன் என்றால் இல்லை. என்னுடைய தொலைபேசி எண் 9629104010 என்றால் சரிதான். அந்த எண்ணில் இருந்து 29.03.2019 முதல் 04.01.2021 வரை பல்வேறு செய்திகள் நான் புகார்தாருக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மேற்படி செல்நம்பரை வேறுயாரும் பயன்படுத்த முடியாது என்றால் சரிதான், ஆனால் வாட்ஸ் ஆப் நம்பரை பயன்படுத்தலாம். மேற்படி இந்த தகவலை நீதிமன்றத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான்தான் ரூ.1,25,00,000/- ஐ செட்டில் பண்ணி விடுகிறேன் என குறுஞ்செய்தி புகார்தாரருக்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

புகார்தாரரே அதை செய்திருந்தால் எனக்கு அது பற்றிய தகவல் வராது என்று சொன்னால் சரிதான். நான் எனது பதிலறிவிப்பில் புகார்தாரர் எனது தொலைபேசியை வாங்கி அதில் குறுஞ்செய்திகளை பதிவு செய்துவிட்டார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதுபோல் பதிவு செய்துவிட்டார் என்றால் எனது கைப்பேசியை அவரிடம் எவ்வளவு நேரம்

கொடுத்தேன் என்றால் 10 நிமிடம் கொடுத்தேன். அந்த 10 நிமிடத்தில் தான் புகார்தாரர் 29.03.2019 முதல் 04.01.2021 வரை குறுஞ்செய்திகளை பதிவு செய்துவிட்டார் என்றால் சரிதான். 10 நிமிடம் எனது செல்போனை புகார்தாரரிடம் கொடுத்ததால் அவர் எனது வாட்ஸ் ஆப்பில் இருந்து குறுஞ்செய்திகளை அனுப்பிக்கொண்டார் என காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அது குறித்து சட்ட ரீதியாக அறிவிப்பு ஏதேனும் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. இன்றைய தேதி வரை காசோலையை திரும்ப கொடுக்கவில்லை என சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் மீது சென்னையில் எத்தனை காசோலை வழக்கு இருந்தது என்றால் 2 வழக்கு இருந்தது. அந்த வழக்கில் எனக்கு தண்டனை கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு மேல்முறையீடு செல்லும்போது தள்ளுபடி ஆகிவிட்டது. அந்த வழக்கில் ரூ.30,00,000/- கொடுத்தபிறகு தான் வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான்.

அந்த வழக்கிற்காக நான் சென்றிருந்ததால் தான் போன வாய்தாவில் இந்நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். நான் காசோலை கொடுத்து பணம் வாங்கியது உண்மை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால் தான் இது குறித்து இன்றைய தேதிவரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால சரியல்ல. எனவே, இவ்வழக்கானது புகார்தாரருக்கு சாதகமாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பிரேம்குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K